சித்த மருத்துவம்

திங்கள் இதழ்

மலர் : 12 ✻ திருவள்ளுவர் ஆண்டு 2025 பிப்ரவரி 1, 1994 ✻ இதழ்: 10

சிறப்புக்கட்டுரை:

சித்தர்கள் கண்ட அந்தியகால சொர்ணபூபதி

இந்த இதழில்

உண்ணாநோன்பைப் பற்றி காந்தியடிகள்
இருமல் - காசநோய் குணமாக அரக்குத்தைலம்
பரிபாஷையின் தொன்மை
-டாக்டர். எஸ். சௌந்தரபாண்டியன்
மண்ணின் மகிமை
நீரழிவு -டாக்டர் தேவூர் மணிவாசகன்
வில்வாதி லேகியம்
கல்தாமரை
நீர்த்த இரணங்கள் குணமாக புகை மருத்துவம்
பல்வகை மரப்பால்களின் குணங்கள்
கண்ணின் பாதிப்புக்குக் காரணமும்
கண்பார்வை கூர்மையாகவும்
பெண் மலட்டுத்தன்மைக்கு காரணங்கள்
சிற்றாமுட்டி (Pavoniazeylanica)
-டாக்டர் பெ. மு. இரா.

தனிப் பிரதி ரூ. 2-50 ஆண்டுச் சந்தா ரூ. 28-00

நிறுவனர் டாக்டர் சிற்சபை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

"சிற்சபை"

சித்தானந்த வைத்தியசாலை,

122-C, ராஜ வீதி, காஞ்சிபுரம்-2.

போன்: 2981

நிறுவனர்: அமரர். டாக்டர். சிற்சபை

மஞ்சட்காமாலை, குன்மவியாதி, சருமவியாதிகள், பக்கவாதம், ஆரம்ப யானைக்கால் வியாதி, மூலநோய், சுவாச காசம், பீனிசம், கில்வாயு, வெண்புள்ளி, மதுமேகம், பெண்களின் மலட்டுத் தன்மை, ஆண்களின் வீரியக் குறைவு, ஆரம்பப் புற்று வியாதிகள், குழந்தை வியாதிகள் முதலியவைகட்கு நல்லமுறையில் சிகிச்சை அளிக்கப்படும்.

விரிய அணுப்பெருக்குதலுக்கு சிறந்த சிகிச்சை உண்டு.

மருத்துவர்: டாக்டர். சி. தங்கதுரை

சிகிச்சை நேரம்: { காலை 8 மணி முதல் 1 மணி வரை.
மாலை 4 மணி முதல் 8-30 மணி வரை

ஞாயிறு மாலை விடுமுறை.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy.

இரசவாதம் என்றால் இரசத்தின் மாறுதல்களை அறிவது என்று பொருள். சித்தர்கள் கண்டறிந்த இந்த வாதவித்தையே சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சியாகும்.

— அமரர். டாக்டர். சிற்சபை

சித்த மருத்துவம்

ஆசிரியர் டாக்டர். சி. அம்பிகாபதி

உதவி ஆசிரியர் டாக்டர். சி. தங்கதுரை

மலர்: 12 | 1994 பிப்ரவரி 1, | இதழ்: 10

சித்தர்கள் கண்ட அந்திய கால சொர்ண பூபதி!

மனித இனம் எல்லா சிறப்பும் பெற்று, நீடுழி காலம் நோயின்றி வாழவும், வந்த நோயை எளிதில் போக்கிக் கொள்ளவும், இறப்பைத் தள்ளிபோடவும், முதலியவற்றைக்கண்டறிவதற்காலதங்கள் வாழ்நாட்களையே. இதற்காக சித்தர்கள் அர்ப்பணித்தார்கள்.

நோய்களைத் தீர்ப்பதற்கு மூலிகைகளைக் கொண்டு, மருந்துகள் மட்டும்தான் கண்டு பிடித்தார்கள் என்று, நாம் நினைத்துக்கொண்டுள்ளோம். ஆனால் நம் நாட்டில் வாழ்ந்த சித்தர்கள் மக்களுடைய நோய்களைத் தீர்ப்பதற்கு இரசப்பாஷாணப் பொருட்களை கொண்டு, கட்டு மாத்திரைகள் செய்து உபயோகப்படுத்தியுள்ளனர். இவைகள் நெருப்புக்கு ஒடாத பர்ஷாணச் சரக்குகளை உடையது ஆகும் குறிப்பாக முப்பு என்ற உயர்ந்த பொரு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

ளைக்கொண்டு செய்யப்பட்ட வையாகும்.

தமிழ் நாட்டில் வாழும் பல பரம்பரை சித்த மருத்துவர் களிடம் நூற்றுக்கணக்கில் கட்டு மாத்திரைகள் உள்ளன. இதனைச் செய்யும் விதமும், உபயோகம் பற்றிய குறிப்புக் கள் காலத்தால் அழிக்கப்பட்ட தாலும் மறைக்கப்பட்டதாலும், இந்த உயர்ந்த மருத்துவ முறை, மக்களுக்குத்தெரியாமல் போய் விட்டது, இருந்தாலும் தமிழ் நாட்டில், ஒரு சில மருத்துவர் களுக்கு, இதன் குறிப்பை வைத் திருந்து, செய்முறையும் தெரியும் என்று நம்பப்படுகிறது.

அந்தக்காலத்தில் சித்தர்கள், அடக்கம் செய்தஇடத்தில்தான் கோவில்களைக் கட்டினார்கள் அப்படிப்பட்ட இடங்களில் உயர்ந்த கருங் கற் களி னால் (அ) பஞ்சலோகத்தினால்தான் சிலைகளை அமைப்பார்கள் பழனியில் தண்டாயுதபாணி மூல விக்கிரகம் மட்டும் நவப் பாஷணத்தினால் கட்டி, உரு வாக்கியுள்ளனர். இப்படிப்பட்ட மூல விக்கிரகத்தை அபிஷேகம் செய்யப்பட்டு, அதனைமக்கள் அருந்தி, நோய்நொடியிலிருந்து காப்பாற்றப்பட்டனர். அதே சமயத்தில், பழனி [illegible]

ஆன்பாலயா
ஸ்கை அறக்கட்டளை
நடத்தும்
சுவாமி வேதாத்திரி மகரிஷி
ஆன்மிக
விஞ்ஞானக்கல்லூரி

- ஆறாவது பயிற்சி வகுப்பு

1994 மார்ச்சு மாதம் முதல் ஒவ்வொரு சனிக்கிழமை யும் பகல் 3-00 மணி முதல் 7-00 மணி வரை

- மொத்தம் எட்டுவகுப்புகள் நடைபெறும்.
- எளிய முறை குண்டலினி யோகப் பயிற்சி
- காயகல்பப் பயிற்சி
- எளிய உடற் பயிற்சி
- அகத்தாய்வு
- கட்டணம் ரூ. 200/- (இருநூறுரூபாய்)
- மாணவ மாணவியரின் பெயர்களை முன்னதாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- F.V.M.C.S.S. Fellow of Vethathiri Maharishi College of Spiritual Science என்ற சான்றிதழ் வழங்கப்படும்.

இடம்:
சீரிறசனம் மருத்துவமனை
அகத்தியர் தியான மண்டபம்
152, ரங்கராஜபுரம் ரோடு,
கோடம்பாக்கம். சென்னை-24.
போன்: 428098.

CC-0. Prof. Tomar Singh Dharmapuri Collection. Digitized by Muthulakshmi Research Academy

பாணி நாளுக்குநாள், இளைத்து வருவதைக் கண்டவுடன் அங்கே அபிஷேகம் செய்வதை நிறுத்திவிட்டனர்.

இப்படிப்பட்ட கட்டு மாத்திரைகளில் அந்தியகாலசிரார்த்த பூபதி என்ற ஒருகட்டு மாத்திரை எங்களிடம் உள்ளது என்றாலும் இதனைப்போன்ற சில கட்டு மாத்திரைகள் செய்முறை, பயன்படுத்தும் முறை தெரியாமல் இருக்கின்றோம்.

உணர்விழந்து, நாடித்துடிப்பு, இருதயத்துடிப்பும் நின்றுபோகும் நிலையில் உள்ளவர்கட்கு மீண்டும் உணர்வு கொஞ்ச நேரம் உண்டாகி, அவர்களிடம் அவசியமான வாக்குமூலம் பெறுவதற்காக ஒரு அதிசயமான கட்டுமாத்திரையைகண்டு பிடித்தனர் அந்தக் கட்டுமாத்திரையின் பெயர்தான் அந்திய காலச்சிரார்த்தபூபதி என்பதாகும்.

எங்களுடைய தந்தையார் காலத்தில் இது அதிகமாக உபயோகப்பட்டது. அதிலே சில குறிப்புக்களை மட்டும் தெரிவிக்க வேண்டியது எங்களது கடமையாகும்.

அறிஞர் அண்ணாவின் சிறிய தாயார் இராஜாமணி அம்மாள் மிகவும் நோய்வாய்ப்பட்டு கவலைக்கிடமாக இருந்தார் அப்போது அறிஞர் அண்ணா அவர்கள், டெல்லியிலே ராஜ்ய சபை உறுப்பினராக இருந்தார். அறிஞர் அண்ணாவிற்கு, உடனே புறப்பட்டு வரும்படியாக செய்தி தெரிவிக்கப்பட்டது. இந்த சமயத்தில் அறிஞர் அண்ணாவின் நெருங்கிய நண்பரும், எங்களது குடும்பநண்பருமான காலஞ்சென்ற அ. க. தங்கவேலு முதலியார் அவர்கள் எங்களதுதந்தையாரை அழைத்துச்சென்று மேற்சொன்னகட்டு மாத்திரையை கொடுக்கச்செய்தார்.

சிலமணி நேரத்தில் இறந்து விடுவார்கள் என்று சொல்லப்பட்ட, அண்ணாவின் சிறிய தாயாருக்கு மீண்டும் உணர்வு ஏற்பட்டுவிட்டது, அறிஞர் அண்ணா அவர்கள் தன் சிறிய தாயாரிடம் பெரும் அன்பை வைத்திருந்தார். எங்கே தன் சிறியதாயார் இறந்துவிட்டாரோ என்று பயந்த நிலையில் வந்த அறிஞர் அண்ணாவைப்பார்த்து அண்ணாவா என்று அழைத்ததைப்பார்த்தவுடன், அண்ணாவுக்கு மிகவும் ஆச்சரியமாகி விட்டது. பிறகு மேலும் சிறிய தாயார் அவர்கள், இருபது நாட்கள் உயிரோடு வாழ்ந்தார்கள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

V.A.T. Medical Agency
விற்கும்
அம்ரீஸ் பார்மா மருந்து
CHITS-LIV
CHITS-COF
CHITS-VITAL TONE
CHITS IMFORTE
CHITS COFFEE POWDER
CHITS KUMARITONE
CHITS RUMACURE OINT
CHITS TOOTH POWER
CHITS CURE OINT
ஏஜெண்டுகள்
திரு. சம்பத்குமார்,
19, தேரடி வீதி, சேலம்-1.
திரு. S. K. பெருமான்
காதி வஸ்திராலயம்
946, கீழவாசல், தஞ்சாவூர்.
திரு ராஜகோபால்
நாட்டு மருந்து கடை சந்து
ஈஸ்ட் ரோட், தஞ்சாவூர்.
ராஜன் கிளினிக், கரூர்-5.
திரு. இரவிந்திரநாத்,
நெ. 3, மெயின் ரோடு,
குத்தாலம்
திரு. விவேகானந்தன்
260/10, Sion Road,
East Sion, Bombay.
சென்னையில்
காதி கிராமோத்பவன்கள்
அண்ணா சாலை,
அடையார்.
சர்வோதய சங்கங்கள்
அண்ணாசாலை,
புரசைவாக்கம்
மடிப்பாக்கம்
மயிலாப்பூர், போரூர்
ராட்டன் பஜார்
தாம்பரம்
தி.நகர் காஞ்சிபுரம்
குரோம்பேட்டை
அண்ணாநகர்
152 ரங்கராஜபுரம் ரோடு
கோடம்பாக்கம்,
சென்னை-24.

இதைப்போலவே வைணவர்களில் ஒரு பிரிவினருக்கு, ஸ்ரீரங்கத்திலுள்ள முதலியாண்டான் சுவாமிகள் என்பர்தான் குரு ஆகும். அவருக்கு பக்கவாத நோய் (Stroke) ஏற்பட்டு ஒரு சிலமணிநேரத்தில் உயிர்பிரியப் போகும் நேரத்தில், எங்கள் தந்தையார் மேற்கண்ட கட்டு மாத்திரையை அவருக்குக் கொடுக்க அவர் மீண்டும், ஆறுமாத காலம் யிர் வாழ்ந்தார். இதற்காக வைணவர்களின் தலைவர் காலம் சென்ற முதுபெரும் புலவர் பிரத்வாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரியார் அவர்கள் எங்கள் தந்தையாரை அழைத்து பாராட்டு தெரிவித்தார்.

இந்தக் கட்டு மாத்திரையின் பெருமையைப்பற்றி தெரிந்து கொள்வதற்காகத்தான், மேலே சில குறிப்புச்சுகளை மட்டும் எழுதியுள்ளோம் இதைப் போல தமிழ்நாட்டில் உள்ள இப்படிப்பட்ட கட்டு மாத்திரைகளை வைத்துள்ள, பரம்பரை சித்த மருத்துவர்கள், பல நோய்களை குணப்படுத்தி செய்திகளை வெளியிட வாய்ப்பில்லாததால் வெளியிட முடியவில்லை!

இப்படிப்பட்ட அரிய கட்டு மாத்திரைகளின் செய்முறைக்கு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அரசாங்கமே வேண்டிய உதவி செய்து அவர்களைப் பாராட்டி, தக்க நிதி உதவிகள் செய்யலாம். இதன் மூலமாக சித்தர் களின் இந்த அரிய சிகிச்சை முறையை, உலகறியச் செய்யலாம்.

சி. அம்பிகாபதி.
(ஆசிரியர்)

சந்தாதாரர்களே கவனிக்க!

ஆண்டு சந்தா ரூ 28—00 ஆயுள் சந்தா ரூ 300-00 நேரிடையாக பணம் செலுத்தும் அன்பர்கள் கீழ்க்கண்ட இரண்டு விலாசங்களிலும் பணம் செலுத்தலாம். **பாங்க்** இருக்கின்ற இடங்களிலுள்ள அன்பர்கள் **'சித்த மருத்துவம்'** என்று D. D. எடுத்து சென்னை கிளை அலுவலகத்திற்கு அனுப்பவும்.

சித்த மருத்துவம்
(தலைமை அலுவலகம்)
டாக்டர் சிற்சபை
சித்தானந்தா வைத்தியசாலை,
122-சி, ராஜவீதி,
காஞ்சிபுரம்-2.
போன்: 2981

சித்த மருத்துவம்
(கிளை அலுவலகம்)
டாக்டர்
சிற்சபை மருத்துவமனை
152, அரங்கராஜபுரம் சாலை,
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.
போன்: 428098

குறிப்பு: சில அன்பர்கள் இவ்வளவு விளக்கமாய் எழுதியபின்பும் சந்தா எங்கு அனுப்புவது என்று எழுதுகின்றனர். அவர்கள் இதைப்படித்துப் பார்த்து தெரிந்துகொள்ள வேண்டும்

சித்த மருத்துவம் மலர் பைண்டுவிற்பனைக்கு

முன் இதழ்கள்

மலர் - 5 பைண்டு ரூ. 25
மலர் - 6 பைண்டு ரூ. 25
மலர் - 7 பைண்டு ரூ. 25
மலர் - 8 பைண்டு ரூ. 30
மலர் - 9 பைண்டு ரூ. 30
மலர் - 10 பைண்டு ரூ. 30
மலர் - 11 பைண்டு ரூ- 30

தபால் செலவு தனியாக ரூ.3-00(மூன்று ரூபாய்) சேர்த்து தேவைக்கு மணியார்டர் செய்து பெற்றுக்கொள்ளவும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

உண்ணாநோன்பைப் பற்றி காந்தியடிகள்!

ஏல்லையற்ற பொறுமை, உறுதியான தீர்மானம், நோக்கத்தில் முழுகவனம், குற்றம்குறையற்ற மன அமைதி, கோபமின்மை இவையெல்லாம் உண்ணாவிரதம் இருப்போனிடம் இருக்கவேண்டும்.

உண்ணாவிரதத்தைப் பற்றி நம்மிடம், உண்மையான-தோர் இலக்கிய ச் சுரங்கமே இருக்கின்றது, ஆன்மா தூய்-மைக்காண விரதங்களை, நம் காலத்தில்மறந்து விட்டார்-கள். உடலுக்குள் இருக்கும், கேடு விளைவிக்கும் பொருள்களைக் களைவதற்காக மேற்கொள்ளும் உண்ணவிரதங்கள் பயன் அளிப்பவையாகும்.

இந்து மதத்திலேயே, உண்ணாவிரதம் ஒரு மாபெரும் அறமாகும், உண்ணாவிரதம் இன்றி வழிபாடு இல்லை. வழிபாடு இல்லாமல் உண்மையான உண்ணா நோன்பும் இல்லை என்பதே, எனது நம்பிக்கையாகும். எனது உண்ணவிரதம், வேதனை அடைந்துள்ளஓர் ஆன்மாவின் வழிபாடேயாகும்.

உண்ணாவிரதம் இருப்பதற்கு, உடலில் சக்தி இருந்தால் மட்டும் போதாது. கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கையில் லையேல் அத்தகைய உண்ணாவிரதத்தால் பயன் இல்லை. ஒருவரது ஆன்மாவின் ஆழத்திலிருந்து அதுவரவேண்டும்

பெரும்பாலான உண்ண விரதங்கள் பட்டினி கிடப்பது என்றே கூறப்படுகின்றன. அத்தகைய பட்டினி முறைகள், போதிய சிந்தனையும், முன்னேற்பாடு இல்லா மலும் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த முறை அடிக்கடி கைக்கொள்ளப்படுமாயின் ஒருவேளை அதில் இருக்கக் கூடிய கொஞ்சநஞ்ச சக்தியும் போய், அது பிறர் கேலி செய்வதற்குக் காரணமான நடவடிக்கையாகிவிடும்

உண்ணாவிரதம் இருக்கும் ஒருவர் பழரசம் அருந்த வேண்டுமா (அல்லது) வேண்டாமா என்பது உண்ணா விரதத்தைத் தாங்கும் அவரது உடல் வலுவைப் பொறுத்திருக்கிறது. ஆனால் உடலுக்கு அத்தியாவசியமாக அளவுக்கு அதிகமாக பழரசம் அருந்தக்கூடாது தண்ணீர் மாத்திரம் அருந்துபவர்தான், மகத்தான மனோபலம் உடையவராக இருக்கிறார்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இருமல் — காசநோய் குணமாக அரக்குத்தைலம்!

ஒரு பரக்கு 10 பலம் எடுத்து இடித்துப் பானையில் போட்டு, இதனுடன் 4படி நீர் விட்டு 1படி கிஷாயமாகசெய்து கொண்டு, அரத்தை, தேவதாரி நெல்லிமுள்ளி, அயிற்கட்டை, சந்தனக்கட்டைவிஷ்ணுகிரந்தி சீந்தில்தண்டு, பேராமுட்டி, சிற்றாமுட்டி, நன்னாரிவேர், முத்தக்காசு, அமுக்குராவேர், விருகங்கிழங்கு, மருள்கிழங்கு, நெய்ச்சட்டிவேர், நிலப்பனைக்கிழங்கு, தாமரைவளையம், வெட்டிவேர், விலாமிச்சைவேர், முக்குத்தீப்புண்டு வகைக்கு 5 பலமாக இடித்து, ஒரு பானையில் போட்டு வகைக்கு 5 பலமாக இடித்து, ஒரு பானையில் போட்டு 8படி தண்ணீர்விட்டு அடுப்பில் வைத்து, அஷ்டபாக கிஷாயமாக இறக்கிக்கொண்டு, ஒருபடி நல்லெண்ணையில் இந்த இரண்டுவித கிஷாயத்தையும் ஊற்றி, அதோடுகூட ஏலம் லவங்கப்பட்டை, சண்பகப்பூ கோஷ்டம், கடுகுரோகணி அதிமதுரம், கடுஞ்சீரகம், கள்தூரி மஞ்சள், பெருஞ்சீரகம், சிறு. நாகப்பூ, செவ்வல்லிக்கொடி, பெருங்குரும்பை, சந்தப்பை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கீழ்க்கு

சுக்கிற்கு மிஞ்சின மருந்தில்லை என்பார்கள், குறிப்பாக கூறவேண்டுமானால் வயிற்றுக் குத்தல், சீதபேதி, குலை நோய், காதில் ஏற்படும் குத்தல், வயிற்றில் உப்புசம், உடல் சூடு, அஜீரணம், புளியேப்பம் மார் பெரிச்சல் ஆகிய நோய்களுக்கு இது கைகண்ட மருந்து,

சாம்பிராணி, ஜடாமாஞ்சில், கற்பூரம், பூலாங்கிழங்கு தேவதாரம், வகைக்கு ¼ பலம் ஜாதிக்காய் கிராம்பு, கோரோசனம் வகைக்கு 1 விராகனெடை பசுவின் தயிர் 1 படி கொண்டு வந்து, அதிலிருகின்ற நீர்வடிந்து போகும்படியாக ஒரு சவுக்கார ரத்திற்கூட்டி, அந்த முட்டையின் கீழ்ஒரு பாத்திரம் வைத்து, ஒருபடிநீரை அதிலிருந்து வடித்துக்கொண்டு, மேற்படி சரக்கு வகைகளை யெல்லாம் இந்த நீரை விட்டரைத்து, மேற்படி சரக்கு வகைகளை யெல்லாம் இந்த நீரை விட்டரைத்து, மேற்படி எண்ணெயிற் சேர்த்துக் கொண்டு, அந்த எண்ணெயை மெழுகுபதமாய் காய்ச்சிக் கொண்டு, இந்த எண்ணெயைத் தேய்த்துக்கொண்டால் இருமல் சுவாசம், அஸ்திரம் முதலியன குணமாகும். இந்த எண்ணெயைத் தேய்த்துக் கொண்டால் மேற்கண்ட வியாதிகள் குணமாகும்.

சித்தாலயா" பிரதி சனிக்கிழமை காலை 11-00 மணி முதல் 2-00 மணி வரை சித்தாலயாவில் மருத்துவ ஆலோசனை வழங்கப்படும்.

சித்தாலயா 316, 5-வது தெற்கு குறுக்குத்தெரு,
கபாலீஸ்வரர் நகர், நீலாங்கரை, சென்னை-41.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பரிபாஷையின் தொன்மை!

டாக்டர். எஸ். சௌந்தரபாண்டியன்,
எம்.ஏ.,எம்.ஏ., பி.எட்., டிப்.வ.மொ., பி.எச்.டி.,
காப்பாட்சியர்,
அரசினர் கீழ்த்திசைச்சுவடிகள் நூலகம்,
சென்னை-5.

சித்த மருத்துவத்தில் பரிபாஷை என ஒன்று உண்டு. அதாவது ஒரு பொருளை நேரடியாகக் குறிப்பிடாது. ஒவ்வொரு பெயரால் மறைமுகமாகக் குறிப்பது. சில எடுத்துக்காட்டுகள்:

பரிபாஷை	பொருள்
1. கைலாசமூர்த்தி	கூடம் (Camphor)
2. இரலிமதி	கரியுப்பு (TableSalt)
5. சச்சிதானந்தம்	சிலாசத்து (Zine Carbonate)
4. நாகம்	அரிதாரம் (Orpiment)
5. அக்னி	கந்தகம் (Sulphur)
6. விந்து	இரசம் (Mercury)
7. மகாராசா மூலி	வெள்ளானை வேர்
8. வாஞ்சமாஞ்சி	மண்ணீரல் (Spleen)
9. நஞ்சவிழ்மணி	மண்க்குடல் (Intestines)
10. தலைமுடியுப்பு	வெடியுப்பு Potassium nitrate

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இவ்வாறு பரிபாஷையாகக் குறிப்பதற்கு கி.மு. 2 ஆம் நூற்றாண்டை ஒட்டியதாகக் கருதப்படும் நெடு நெல்வாடையில், ஆதாரமுள்ளது.

நக்கீரரின் நடுநல்வாடையில் "உத்தரம்" (மரவிட்டம்) என்று வரவேண்டிய இடங்களில் 'நாளொடு பெயரிய கோளமை விழுமரம் (வரி. 82) என வந்துள்ளது.

நாள் - விண்மீன் இங்கே உத்தரம் என்பதை பரிபாஷையாக 'நாள் என்ற சொல்லால் குறித்துள்ளார்.

எனவே சங்ககாலத்திலேயே பரிபாஷை கூறும் மரபு தமிழகத்தில் இருந்தது என்று தெளிவாகிறது.

பரிபாஷை, அத்துறை நன்கு வளர்ந்திருந்தது என்பதையும் அத்துறையில் மாந்தர் நிறைய ஈடுபட்டிருந்தனர் என்பதையும் கற்றுத்தேர்ந்தவர்கள் அதில் பலராக இருந்தார்கள் என்பதையும் நமக்கு உணர்த்துவதாகும்.

தினைவாற்றலுக்கு ஓர் வல்லாரை!
மூளை நரம்புகள் வலிவு பெற ஓர் வல்லாரை
பெற்றிடுவீர் வல்லாரையின் பலனை

"வல்லாரை கேப்சூல்ஸ்"
VALLARAI CAPSULES

இங்ஙனம்,
டாக்டர். சி. தங்கதுரை

மருத்துவமனை:
சிற்சபை சித்தானந்த
வைத்தியசாலை
காஞ்சிபுரம்-2.
போன்: 2981

இல்லம்;
56-B, K. T. S. மணி தெரு,
மாமல்லன் நகர்,
காஞ்சிபுரம்.
போன்: 5351

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மண்ணின் மகிமை

மனித உடலை உருவாக்கும் பஞ்சபூதங்களில் ஒன்றாகிய மண் நோய்களை குணப்படுத்துவதிலும் வல்லது.

மண் என்பது இங்கே சுத்தமான ஈரமண்ணைக் குறிக்கும். மணல், உப்பு சுண்ணாம்பு, கந்தகம், மைக்கா, தூசு, கற்கள் இல்லாத தூய மண்ணைத் தொட்டிகளில் நீரில் ஊறவிட்டு ஒரு நாளைக்குப் பின்னரே சிகிச்சைக்குப் பயன்படுத்த வேண்டும்.

இரண்டுவிதமாக மண் சிகிச்சைச் செய்யலாம். மண்ணை மேலே பூச்சாகப்பயன் படுத்தலாம், துணியில் சுற்றி பட்டியாகப் பயன்படுத்தலாம்.

மண்பூச்சு:

கட்டி, நண், படை, வலி ஆகியவற்றுக்கு மண்பூச்சு குணமளிக்கும். இரத்த ஒட்டத்தடை தூக்கமின்மை, நரம்புமுறுக்கு தோல் நோய்கள் ஆகியவற்றுக்கும் மண்பூச்சு நல்லது. மண் பூச்சை வெயில் நேரத்தில் ஆனால் நிழலில் அமர்ந்து செய்ய வேண்டும். குளிர்காலத்தில் கூடாது.

மண்பட்டி

மிருதுவான வண்டல் மண்ணைச் சிகிச்சைக்குப் புயன் படுத்தலாம். மண்ணைக் காய வைத்து இடித்துச் சல்லடையில் இட்டுச் சலித்துப் பயன்படுத்த வேண்டும்.

மண்பட்டி 6 அங்குல நீளமும் $\frac{1}{2}$ அங்குல கனமும் 3 அங்குல அகலமும் உடையதாக இருக்க வேண்டும் பலருக்குத் தலைவலிக்கு மண்பட்டி போட்டால் குணமாவதுண்டு.

இரத்த பேதிக்கு மண்பட்டி சிறந்த சிகிச்சை வயிற்றில்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இதனை வைத்தால் உஷ்ணம் உடனே குறையும். மண்பட்டியினை வைத்திருக்க வேண்டிய கால அளவு 15 நிமிடங்கள் ஆகும். வயிற்றுக்குப் போடும் பட்டி 8 அங்குல நீளம் 4 அங்குல அகலம் 1 அங்குல கனம் உள்ளதாக இருக்கலாம் மருத்துவர் ஆலோசனைப்படி சிகிச்சை செய்துகொள்ளவும்.

அமரர்

திருக்குறள் முனுசாமி அவர்கட்கு

இதய அஞ்சலி

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே, மக்களுக்கு திருக்குறள்என்றாலே காலஞ்சென்ற அமரர் திருக்குறள் முனுசாமி அவர்களின் பெயர்தான் நினைவுக்கு வரும். அந்த அளவுக்கு திருக்குறளை விளக்கும்போது சிறுசிறு கதைகளைச் சொல்லி மக்களை மகிழ்ச்சிவெள்ளத்தில் ஆழ்த்திவிடுவார். அவருடைய மறைவு தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் பேரிழப்பாகும். அன்னாருக்கு சித்த மருத்துவ வாசகர்கள் சார்பாக, எங்களது இதய அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

உலக அறிஞர்களின் பொன்மொழிகள்

ஒவ்வோர் ஆணுக்கும், பெண்ணுக்கும் தொழில் பிறர்க்குத் தொண்டு செய்வதாகும். —டால்ஸ்டாய்

எல்லா இடத்திலும் கடவுள் இருக்கமுடியாது. ஆகவே அவர் தாயைப் படைத்தார். —யூதர்

பெண்களின் கண்ணீர் உலகிலேயே மிகவும் ஆற்றலுள்ள நீர் சக்தியாகும்! —விக்டர் மிஸ்னர்

படித்தவன் அறிவுப்பசியைத் தீர்க்கவும் உழுபவன் உற்பத்தியை பெருக்கிடவும் உறுதுணையாக நிற்கவேண்டும். —பேரறிஞர் அண்ணா

உலகிலே மிகமிகக் கெட்டவன் வேறு யாறுமில்லை. சோம்பேறிமட்டும்தான்! —வால்டர்

நான் முன்பு பட்ட கடனைக் கட்டாயமாகத் திருப்பிசெலுத்த வேண்டிய ஒன்றுதான மரணம். —கிப்ஸ்

மனிதனுடைய வாழ்வு வளம் பெற மெய்ஞானமும் வேண்டும். விருஞானமும் வேண்டும் —சுவாமி வேதாத்திரி மகரிஷி

ரோஜாவின் மணம் எங்கெங்கும் கமிழும், அதைப்போல மனிதர்களின் உண்மையான நட்பு என்றென்றும் நிலைக்கும். —அமுவரடிகள்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

நீரழிவுக்கு ஆரை! நினைவுக்கு வல்லாரை!

நீரழிவு

டாக்டர். தேவூர் மணிவாசகன்

'மாத்திரை' மாத்திரை, மயான யாத்திரை வரை மாத்திரை' இந்நிலைக்கு முடிவு கட்ட விரும்புகிறீர்களா! படியுங்கள்

சிறுநீர், இரத்தப்பரிசோதனை (G.T.T.) மூலம் நோயின் சரியான நிலையை துல்லியமாக அறியலாம்.

நீரழிவு நோயாளர்களுக்கு படிப்படியாக இரத்தக்கொதிப்பு மாரடைப்பு, சிறுநீரக செயலிழப்பு, பார்வைக்குறைவு, சிறுநீர் தாரை புண் ஆகியவை ஏற்படுமாதலால், காலம் கடந்து சிகிச்சைக்கு வருபவர்களுக்கு இந்நோய்களையும் நீக்குகின்ற முறைகள் அவசியம் கொடுக்க வேண்டும்.

போதைப் பழக்கம் உள்ள நீரிழிவு நோயாளர்களுக்கு கூடுதலாக அக்குபஞ்சர் சிகிச்சையும் தேவைப்படுகிறது.

உணவில் கசப்பு, துவர்ப்பு, நாறுள்ள பண்டங்கள் சேர்க்கவும். காலை, மாலை ஆவாரம்பூ டீ குடிக்கவும்.

காலையில் வெந்திய இட்லி (அரிசி 1 பங்கு உளுந்து கால் பங்கு, வெந்தியம் கால் பங்கு) வெந்திய தோசை, வெந்திய ஆப்பம் இவற்றில் ஏதாவது உண்ணவும். வெங்காய சட்னி அல்லது துவையல் சேர்க்கவும்.

மதிய உணவில் மோர் வெங்காயம் பச்சைக் காய்கறிகள் கலந்த பசுங்கலவை கீரைகளில் முருங்கை, சிறுகீரை, ஆரையோ வாழைப்பூ, அவரை, பீன்சு,

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பாகற்காய், சுண்டைக்காய் இடம் பெற வேண்டும்.

இரவு உணவு கோதுமை இட்டிலியாகவோ, தோசையாகவோ, உப்புமாவாகவோ இருக்கட்டும். கறிவேப்பிலை துவையல் அல்லது சட்னிசேர்க்கவும்.

வேப்பங்கொழுந்து, நாவல் கொழுந்து, வில்வக்கொழுந்து கரிசலாங்கண்ணி இலை கருந்துளசி இலை வகைக்கு 5 காலை மாலை சாப்பிடவும்.

இளம்பிள்ளை நீரழிவு நோயாளிகளுக்கு யோகாசனம் அவசியம் தேவை. காலை, மாலை 10

முகப்பருநீங்க!

பாலேட்டை முகத்தில் பூசி அரைமணி நேரம் ஊறிய பின்னர், கடலை மாவுகொண்டு முகத்தைச் சுத்தமாகக் கழுவி வர, முகப்பருக்கள் மறைந்து, முகம் பொலிவடையும்.

சித்த மருத்துவ இதழ் உதவி ஆசிரியருக்குப் பாராட்டுவிழா!

சென்னையில் மறுமலர்ச்சி ஆர்ட்ஸ் அகாடமி என்ற அமைப்பை நடத்தும் திரு. சிவாஜி. இராமதாஸ் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்து விளங்கு பவர்களைப்பாராட்டி, கேடயம் வழங்குவதை கடந்த பத்து ஆண்டுகளாகச் செய்து வருகின்றார்.

அந்த வகையில் சென்னையில் ஜனவரி முதல் தேதியன்று 1994ம் வருடம், பல்வேறு துறைகளில் சிறப்புற பணியாற்றுவர்கட்கு உயர்திரு. K. A. சுந்தரம் I A S தலைமையில், மாண்புமிகு உயர்திரு உச்சநீதிமன்ற நீதிபதி பாஸ்கரன் முன்னிலையில் கேடயம் அளிக்கப்பட்டு பாராட்டு விழா நடைபெற்றது. அதுபோது சித்த மருத்துவ இதழின் உதவி ஆசிரியர் டாக்டர். தங்கதுரை, N.D. அவர்கட்கு சிறந்த சித்த மருத்துவர் என்ற கேடயம் அளிக்கப்பட்டு அனைவராலும் பாராட்டுதல் பெறப்பட்டார்.

தகவல் - ரஜினி - பாரதி

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

திருமுருக வாரியார் சுவாமிகளுக்கு இதய அஞ்சலி!

நெடிய உருவம் நிமிர்ந்த பார்வை, வெண் கலக் குரல், பக்தித்துறை வழிகாட்டிகளில் சிறந்து விளங்கிய ஒரு பெரியாரை நாம் இழந்துவிட்டோம்.

அவரின் பிரசங்கத்தின்போது கேட்கின்ற அனைவர்களையும் பக்திக்கடலிலே மூழ்கடித்து விடுவார். அவரைப் போன்று பக்தித்துறையிலே, பேசுகின்ற ஆற்றல் உள்ளவரை நம் வாழ் நாட்களில் இனிகாணமுடியாது. அவர் ஆற்றிய உரைகள் பக்தர்-கள் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்துநிற்கும். அன்னாருக்கு சித்த மருத்துவ வாசகர்கள் சார்பாக எங்களது இதய அஞ்சலியைதெரிந்துகொள்கின்றோம்.

மூளைக்கு நண்பர்

மூளைக்குணவு பழங்கள் என்பது பழமொழி காலையில் பழங்கள் உண்பது சாலச்சிறந்தது. காலையில் **பழ**ஆகாரம் என்பதே காலையில் பலகார மாகிவிட்டது அந்தந்த பருவத்தில் கிடைக்கும் பழங்களை காலை வேளைகளில் உண்டு வந்தால் மூளையும் உடலும் வலுபெறும்.

நிமிடம் நடக்கவும். சர்வாங்க ஆசனம், தனுர் ஆசனம் நல்ல பலனைத் தருகிறது. காந்த பெல்ட்டும் அணியலாம்.

மேற்கண்டுள்ளபடி மூன்று மாதங்கள் செய்ய இரத்தத்திலுள்ள சர்க்கரை சரியான நிலையை (80 மிகி —120 மிகி அடையும். பக்குவமாய் பச்சிலைகளை மெல்லுங்கள் பாங்கிரியாஸ் செயல்பட்டதென சொல்லுங்கள். முதல்தர மூலிகை வழியில் செல்லுங்கள்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

வில்வாதி லேகியம் செய்முறை!

வில்வவேர் 100 பலம், சிற்றாமுட்டி 50 பலம் நெற்பொரி, கோரைக்கிழங்கு சந்தனத்தூள், விலாமிச்சம்வேர், நெல்லிமுள்ளி, பருத்தி விரைப்பருட்பு தீராட்சைப்பழம், செவியம் மல்லி, சீரகம், ஏலரசி, சுக்கு இவைகளை ஒவ்வொன்றும் 16 பலம் எடுத்து இவற்றையெல்லாம் நன்றாய்ச் சிதைத்து, 32 படி ஆற்று ஜலம் விட்டு மூன்று நாட்கள் ஊறவைத்து நான்காம் நாள் அடுப்பிலிட்டு 4 படி கிஷாயமாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி இதனுடன் இஞ்சிச் சாறு பழச்சாறு வெற்றிலைச் சாறு வகைக்கு ஒரு படி கலந்து சர்க்கரை 2 வீசை கூட்டிப் பாகு காய்ச்சி அதில் சுக்கு 4 பலம், மிளகு 4 பலம், அரிசித்திப்பிலி, கண்டந்திப்பிலி, சிறுநாகப்பூ, திப்பிலிமூலம், தாளிசபத்திரி, கொடிவேலிவேர்ப்பட்டை, மல்லி, சீரகம், நெருஞ்சிவித்து, மூங்கிலுப்பு, லவங்கம் இவைகளை வகைக்கு 2 பலம் இடித்து, வஸ்திரகாயம் செய்துத் தூவி நெய் ½ வீசை தேன் ¼ வீசை விட்டு கிளறி, தினமும் ½ பலம் வீதம் உண்டு வந்தால் பித்தநோய் 40ம் பாண்டு, காமாலை, சுவாசகாசம், காசநோய், ரத்தபித்தம், வாந்தி, கைகால் எரிவு முதலியன குணமாகும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கல்தாமரை

இந்த கல் தாமரை உலகத்திலுள்ள சில மலைகளில்தான் முளைக்கிறது. இந்த மூலிகையின் இலையானது தாம்ரை இலையைப் போலிருக்கும். அதேசமயத்தில் இந்த இலையானது தடித்திருக்கும்.

இந்த தாமரை கிடைப்பது என்பது மிகவும் அரிதாகும். இது சாதாரணமாக ஈரப்பாங்குள்ள மலை இடுக்குகளில்தான் முளைக்கும். ஒரு ஊசியை எடுத்து இந்த மூலிகையில் சொருகி வைத்து, ஒரு வாரம் கழித்துப் பார்க்க, அந்த ஊசியானது செம்பாக மாறி இருப்பதைக் காணலாம். இருப்பதைப் காணலாம். இதைக்கொண்டு இந்த மூலிகையில் தாமிரச்சத்து இருப்பதாகக் கண்டார்கள்.

இதன் பயனை உணர்ந்த ஒரு சித்தர்.

வீரிய விருத்திதரு மெய்க்குப் பலம் கொடுக்குங்
கூரிய குட்டுதனைக் கோபிக்குங் காரீயத்தை
நற்றாம் பரமாக்கு நங்காய்! அடுக்கலுறை
கற்றா மரையதனைக் காண்!
என்று பாடுகின்றார்.

இந்த மூலிகையை உலர்த்தி இடித்துப் பொடிசெய்து சர்க்கரையுடன் கலந்து காலை,மாலை ஒரு சிட்டிகை அளவு சாப்பிட்டுவர உடல் பலம் பெருகும், தாது அதிகம் உற்பத்தியாகும். குஷ்ட நோயைப் போக்கும். முக்கியமாக காரியத்தை செம்பாக்கும் தன்மை இதற்கு உள்ளது.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தீராத இரணங்கள் குணமாக புகை மருத்துவம்

ஜாதிலிங்கப்புகை

தூய்மை செய்யப்பட்ட சாதிலிங்கம் 7 கிராம் இராசி கற்பூரம் 3½ கிராம் ஆகியவைகளை எடுத்து பொடிசெய்து வைத்துக்கொண்டு, மெழுகுத் துணியில் பரப்பித்திரி செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

டர்கிஸ்பாத் (அ) நீராவிக்குளியல் (STEAM BATH) என்னும் பெட்டிக்குள் ஒரு பாத்திரத்தில் நெருப்பை வைத்து, மேற்படி தீரியைச் சிறுதுண்டுகளாகக் கத்தரித்து கொஞ்சம், கொஞ்சமாகப் போட்டுப் புகை பிடித்து வரலாம். இதே பெட்டிக்குள் திரியைக் கொளுத்தி வைத்தும் புகை பிடிக்கலாம். (அ)

ஒருமனிதனை நாற்காலியில் உட்காரவைத்து அவன் கழுத்து வரையில் ஒரு கூண்டு செய்து, நோயாளியை அந்த நாற்காலியில் உட்காரவைத்துக் கூண்டின் துவாரத் தின் வழியாகக் கழுத்தில் மாட்டிக் கூண்டின்மீது துப்பட் டியால் மூடி கூட்டிற்குள் முன்போல் திரியைக் கொளுத்தி வைத்து புகை பிடிக்கலாம்.

நோயாளியை ஒரு நாற்காலியில் உட்கார வைத்து கழுத்திலிருந்து பூமிமட்டம் வரையில் ஒரு துப்பட்டியால் அவனைப் போர்த்தி, அவன் நாற்காலிக்கு கீழே இந்த திரியைக் கொளுத்தி வைத்தும் புகைபிடிக்கலவக்கலாம்.

இந்தப்புகையானது முகத்தில் எந்தப் பாகத்திலும் படாமல் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

இந்தச் சமயங்களில் நல்லெண்ணேய், கடுகு, தேங்கா எண்ணெய் கேழ்வரகு முதலியன நாற்பத்தைந்து நாட்கள்வரை கூடாது. நோயின் தன்மைக்கு ஏற்ப, ஐந்துதடவை ஏழுதடவை ஒன்பதுதடவை என்று புகை பிடிக்கலாம். பச்சைத் தண்ணீர் விட்டு வாய்கொப் பளிக்கலாம்.

இதன் மூலமாக கிரந்திப்பண், அரையாப்பு, பிளவை நோய் தீராத இரணங்கள் முதலியனகுணமாகும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பலவகை மரப்பால்களின் குணங்கள்!

மூத்த வைத்தியத்தில் பால் பெரும்பங்கு வகிக்கிறது செடி கொடி, மரம் விலங்குகளின் பால், தாய்ப்பால் கூட மருத்துவத்திற்குப் பயன்படுகிறது சில பால்களைப்பற்றியும் அவற்றின் குணங்களைப் பற்றியும் தெரிந்துகொள்வோம்.

காட்டாமணக்குப்பால்:

இது எளிதில் கிடைக்கக்கூடிய கிராமங்களில் வேலிக்குப் பதிலாக இந்தச் செடிதான் வேலியாக இருக்கும். இதனை காட்டாமணி செடி என்று அழைம்பர். இது குத்துச் செடி வகுப்பைச் சார்ந்தது.

வெள்ளை காட்டாமணக்கு கடலாமணக்கு, நாட்டு காட்டாமணக்கு, ஆதளை என்ற பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இலை, வேர், விதைகளும் மருத்துவத்திற்கும் பயன்படுகிறது. இலையைக்கிள்ளப்பால் வடியும். அந்தப் பாலை பல்வலி நிற்கும். பல்வலிக்கு இதன் குச்சியால் பல் தேய்க்க நலம் பயக்கும். கட்டிகளுக்கு இப்பாலைத் தடவலாம். ஆண் பெண்குறிகளில் ஏற்படும் புண்களுக்கு இப்பாலை தடவகுணம் கிடைக்கும். காயத்திலிருந்து வரும் ரதத்தை நிறுத்த இப் பாலை காயத்தின்மேல் தடவ வேண்டும். மேகநோய் நீங்கும். சிறிதளவு பாலை உண்டால் வயிற்றுவலி சுத்தமாக தீர்த்து விடும். இரும்பை ஈயமாக மாற்றும் சக்திகூட உடையது.

நந்தியாவட்டப்பால்:

இதுசிறிய மரவகைகளைச் சார்ந்தது ஒற்றைஇதழ் அடுக்கு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பருமனாக வேண்டுமா ?

கனிந்த வாழைப்பழங்கள் இரண்டினுடன் பால் கலந்து மிக்ஸியில் அடித்து சுவைக்குச் சர்க்கரை சேர்த்து அருந்திவர, உடல் பருமன் அடையும்.

இதழ் பூக்களைக் கொண்டது. எங்கும் கிடைக்கக் கூடியது. வெண்மை நிறப் பூக்களைக் கொண்டது. நந்திபத்திரி, பட்டிடை, சுயோதன்ன் மாலை வலம்புரி, நந்தியாவர்த்தம் என்ற வேறு பெயர்களைக் கொண்டது. இந்தப் பாலை எண்ணெயுடன் நன்றாகக் கலக்கி நெற்றியில் தேய்க்க கண்வலி நீங்கும். இந்தப்பாலை வெள்ளைத்துணியில் வடிகட்டி கண்ணில் விட கண்நோய் (MadrasEye) நீங்கும். வெட்டு பட்ட காயங்கள் மீதும் போட லாம்.

பூவரசுப்பால்:

பூவிற்கு அரசு பூவரசு. இது மரவகையைச் சேர்ந்தது. எங்

அண்ணாமலையார்! ஸ்ரீ அருட்கட்டளை நடத்தும்

1994 பிப்ரவரி மாத நிகழ்ச்சி

- பிரதி செவ்வாய்க் கிழமை சுவாமிவேதாத்திரி மகரிஷியின் குண்டலினி யோகபயிற்சி தீட்சையளித்தல் தவவிளக்கம் முதலியன
- பிரதி வியாழக்கிழமை மாலை 6-40 மணி 8-00மணி வரை சித்தமருத்துவ குறள்வகுப்பு திருமந்திரம் வகுப்பு கவாமிஜி பாடல் விளக்கம் கூட்டுத்தவம் அகத்தாய்வு முதலியன
- பிரதி சனிக்கிழமை மாலை 3-00 மணியிலிருந்து 7-00 மணிவரை சுவாமி வேதாத்திரி மகரிஷி கல்லூரி வகுப்புகள்
- சுவாமிஜியின் பாடல்களை திரைப்பட இன்னிசை இயக்குநர் அருள்நிதி.பிரபானந்தர் இசையமைக்க, அருள்நிதி கீதா பிரபானந்தர் அவர்கள் பாடிய பாடல்களின் கேசட்டுகள் விற்பனைக்கு கிடைக்கும்.
- காயகல்ப பயிற்சி பிப்ரவரி மாதம் நடைபெறும்.

இடம்; 152, ரங்கராஜபுரம் சாலை கோடம்பாக்கம், சென்னை-24.
போன்: 458098

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

காஞ்சிப் பெரியவர்
சங்கராச்சார்யார் சுவாமி
அவர்களுக்கு
எங்கள் இதய அஞ்சலி!

இந்த நூற்றாண்டில் நாம் காணும் மகான்கள் சிலரில் ஒருவராகவும், ஏறத்தாழ 70 ஆண்டு காலம் ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டு, அமைதியாகவும், கேட்பவர்களின் சிந்தனையை தூண்டிவிட்டும், நல்வழிப்பாதையை காட்டிய "மாமுனிவர்" மக்களைத் துயர வெள்ளத்தில் ஆக்கிவிட்டு தன்னுடைய கடைசிபயணத்தை முடித்துக்கொண்டார் அவருக்கு சித்த மருத்துவ வாசகர்கள் சார்பாக எங்கள் இதய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர்

சித்த மருத்துவம்.

கும் கிடைப்பது, பிஞ்சு காயிலிருந்து மஞ்சள் நிற பால் கிடைக்கும். இந்தப்பாலைதடவ தோல் நோய், எச்சிற் தழும்பு, மூட்டு வீக்கம் முதலியன குணமாகும்

தடவ தலைவலி ஜலதோஷம் நீங்கும். உள்ளுக்குச் சாப்பிட ருசியின்மை நீங்கும். பாதங்களில் ஏற்படும் நோய்களுக்கு தடவ குணமாகும்.

மட்டிப்பால்:

இதுவும் மரவகையைச் சேர்ந்தது. வடநாட்டில் அதிகமாக உள்ளது. மரத்தை கீற பால் கிடைக்கும். வாசனைப் பொருள்களில் ஊதுபத்தி, சாம்பிராணி முதலியவற்றில் சேர்க்கப்படுகின்றன. இப்பாலை

மான்செவிக்கள்ளிப்பால்:

இலைக்கள்ளி இனத்தைச் சேர்ந்தாலும் மான்செவியைப் போல்இலை உள்ளதால் இம்மரு காரணப்பெயரால் மான்செவிக்கள்ளி என அழைக்கப்படுகிறது கிடைப்பது மிகவும் அரிது. இப்பால் புரையோடிய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

புண், படை, கழலை, வறட்சி, பொரிக்கிரந்தி சொறி போகும். உடல் வளர்ச்சி குறை நீங்க உள்ளுக்குத் தருதல் நலம். பால்நோய் சம்பந்தமானவை இப்பாலைத் தடவ பறந்து போகும்.

வெட்டபாலைப் பால்:

புதர்மண்டியுள்ள பகுதிகளில் காணப்படும். இது சிறிய மர வகையைச் சேர்ந்தது. இலை வெற்றிலையைவிடச் சிறியதாக இருக்கும். இலைகரர்ப்பச்சுவை உடையது. இந்தப்பாலைக் காய்ச்சாத பாலில் விட்டால் சிறிது நேரத்தில் பால் கெட்டியாகி விடும். பாலை நாக்கில் தடவ வாய்புண் குணமாகும். பல் சொத்தை ஈறு வீக்கத்திற்கும் இப்பாலை தடவலாம்.

வெள்ளருக்கம்பால்:

இது செடிவகைகளைச் சேர்ந்தது. தன்னிச்சையாக வளரும் எருக்கஞ் செடிகளில் வெள்ளைப்பூ பூக்கும் வகையைச் சேர்ந்தது. கட்டிகளின் மேல இப்பாலைத் தடவலாம். குளிர் சுரத்திற்கும் பற்று போடலாம். ஐவகை வலிகள், வலிநோய்கள் ஐன்னி, வாதம் முதலியவை தீரும்.

பேய் அத்திப்பால்:

அத்தி, செடி வகையைச் சேர்ந்தது. இதன்பால் புரையோடிய புண், கால்வெடிப்பு, குஷ்ட நோயினால் ஏற்படும் தடிப்பு, முதலியவற்றை நீக்கும் சிறந்தப் புழுக்கொல்லியும்கூட இப்பாலில் ரசம் பற்பமாகும்.

திருகுகள்ளிப்பால்:

விரைவில் வெளிவருகிறது

கலைக்காவலர்
டாக்டர் அம்பிகாபதியின்
(1) உலகம் சுற்றும் மருத்துவர்
ஆயிரம் மருத்துவக்
குறிப்புகளுடன்
(2) ஐநூறு மூலிகைகளின் பெயர்கள் பல்வேறு மொழிகளிலும் அதன் பயன்களும்!
மேற்கண்ட இரண்டு நூல்கள் விற்பனைக்கு வருகின்றது.
அன்பர்கள் படித்துப் பயன் பெறலாம்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

தாது விருத்திக்கு

மாம்பழத்தின் தோலைச் சீவி சிறு சிறு துண்டுகளாக்கி வெய்யிலில் காயவைத்து பிறகு எடுத்து, சுத்த தேனில் அவை மூழ்கும்படியாக ஊறவைத்து, பிறகு ஒரு வாரம் வெய்யிலில் வைத்து குங்குமப்பூவுடன் பொடி பச்சை கற்பூரப்பொடி இவைகளை தூவி வைத்துக் கொள்ளவும்.

தினசரி இரவில் இதைச் சாப்பிட்டு உடன் பால்சாப்பிட்டுவர தாதுவிருத்தி உண்டாகும்.

சங்கன்பால்:

இது ஒரு முட்செடி வகையாகும். நற்சங்கன், முட்சங்கன் சங்கஞ்செடி என்றழைக்கப்படுகிறது. இலைத் தடித்தும், இலையின் நுனியில் முள்ளும் இருக்கும்.

நூறு அல்லது நூற்றைம்பது மி.லி. இப்பாலுடன் முன்னூறு மி.லி.வெள்ளாட்டுப் பாலைச் சேர்த்துக் கொடுத்தால் சிறு நீரை அதிகமாகவெளியேற்றும். உடலில் எப்பகுதியில் உள்ள வீக்கமும் குணமாகும். ஜ்வர வெப்பம் போகும். ஜ்வரம் தணியும். செடியின் வேர்கட்டைகளை மெலிதாக சீவவும். சீவியதை இடித்துப் பிழிய கிடைப்பதே சங்கன் பாலாகும்.

சதுரகள்ளிப்பால்:

கள்ளி இனத்தைச் சேர்ந்தது. தேள் கொட்டியதும் கடிவாயில் இப்பாலை வைத்தால் வலி போகும். ஐயநோய், கிரந்தி, பக்கதூலை குடற்புழுக்கள் மூடக்குவாதம் தீர இப்பாலை உள்ளுக்குத் தரவேண்டும். குஷ்டம்கூட போகும்.

பார்ப்பதற்கு சதுர வடிவமாக தோற்றமளிக்கும். ஆகவே கள்ளி இனத்தைச் சேர்ந்தால் சதுரக்கள்ளி என்றழைக்கப் படுகிறது. இப்பால் மூட்டு வீக்கத்திற்கு பயன்படுகிறது. 'ஜெயநீர் உபரசங்களைச் செந்தூரமாக்க உதவுகிறது. கரப்பான், சொறி, சிரங்கு, ஐயநோய் குஷ்டம், காணாக்கடி, தூலை, குன்மம் சாதாரண புரையோடிய புண், பல்வலி, வீக்கம் வாதம், பால்வினை நோய் முதலியவை குணமாகும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கண்ணின் பாதிப்புக்கு காரணமும் கண்பார்வை கூர்மையாகவும்

சித்த மருத்துவத்தை ஆராய்ச்சி செய்வதிலும், சித்த மருத்துவர்களாகவும் முஸ்லீம் மதத்திலே பலர் இருந்தார்கள். அந்த வகையிலே உயர்திரு. நாகூர் மு. ஆ. முஹியித்தீனப் துல்காதிறு என்பவர் மிகச் சிறந்த மருத்துவ ஆராய்ச்சி யாளராக இருந்தார். அவர் எழுதிய புத்தகத்திலிருந்து கீழ்க்கண்ட குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளது.

குளிர், புகைகூடு, புழுதி, நீதி நிலையற்ற காற்று, நச்சுக்காற்று குளிர்ந்த காற்று ஒரு வஸ்துவை ஒரக்கண்ணால் பார்த்தல், கூர்ந்த பார்வை, பிடரியின் பேரில் சயனித்தல், வயிறு உபறையண்ணல் இரவில் வஜீபனிக்காதல் சமியலுக்கு முன் சயனித்தல், தலையில் ஆவியை உண்டாக்குதல் உப்பு, கசப்பு, உலர்ந்த வஸ்துக்களை உண்ணல், பருப்பு ஆவி புகையுண்டாவன யாவையும் திண்ணுதல், தொடர்ந்து வெந் நீர்ப் புகையில் இருத்தல் இரத்தம் குத்திவாங்குதல், தூங்காமல் முழித்தல், வெங்காயம், பூண்டு உப்பு இவைகளை அதிக அளவு உண்ணல், நெய், நெய் சத்துள்ளவைகளை இரவில் உண்ணுதல் ஒரே இடத்தை அதிகநேரம் பார்க்குதல் சூரியன் உள்பட அதிக பிரகாசமுள்ள இடத்தைப் பார்த்தல், கீரைக் கொழுந்தும் குருத்தன்றி இலை காம்பைத்திண்ணுதல் ஆகிய

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

இவைகளால் கண்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

தெளிந்தநீரைக் குடிப்பதும், வாசனையுள்ளவற்றை முகருவதும், பசுமை, அழகிய முகம், தண்ணீர் இவைகளைப் பார்ப்பதும், நல்ல பேச்சுக்களைக் கேட்பதும். மேற்கண்டவைகளால் கண்களின் பார்வை கூர்மையாகும்.

புலியின் பித்தைக் கண்ணில் தீட்டிவந்தாலும் பாம்பின் கண்ணீரைஎடுத்து கண்ணில் தீட்டிவந்தாலும் காரம்பசுவின் பித்தைக் கண்ணில் மையாக இட்டாலும் பார்வை கூர்மையாகும் பிவண்டுவயிற்றிலுள்ள ஈரப்பசக்கைக் கண்ணில் தீட்டிவந்தால் பார்வை கூர்மையாகும். இதன் மூலமாக கண்ணில் இருள் மங்கல், வெள்ளை, நீர் வடிதல் முதலியன குணமாகும். முள்ளம் பன்றியின் பித்தைக் கண்ணில் தீட்டினால், பார்வை அழகையும் கூர்மையாகவும் இருக்கும்.

பூண்ராத்தேன் (GAILIC HONEY) போன்: 426714

தயாரிப்பு: சிற்சபை பார்மசி, சென்னை-24.

இரத்த அழுத்தம், இரத்தத்தில்கொழுப்பு, இருதய கோளாறு சுவாசகாசம், நாட்பட்டசளி, வயிறு பொருமல் நரம்பு வலி, தோள்பிடிப்பு குணமாக சீரணசக்தி உண்டாக்கி வாயுக்களை அகற்றி வயிறு உப்பிசப் குணமாகி சளி கரையும்.

கிடைக்குமிடம்: சிற்சபை மருத்துவமனை,
152 / 1, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-2

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

பெண் மலட்டுத்தன்மைக்கு காரணங்கள்!

சில பெண்களுக்கு கருப்பையில் ஒருவித விஷவாயு எப்போதும் குடியிருந்து அங்கு கருவாகும் பிண்டத்தை வெளியேற்றுவதையே தொழிலாய்க் கொண்டிருக்கும் இந்த நிலையிலுள்ள பெண்கள் கருத்தரிப்பார்கள். ஆனால் பிள்ளை பெறவே மாட்டார்கள். வைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை. என்பதுபோல் ஒன்றிரண்டு மாதத்திலேயே அவர்களின் கரு சிதைவாகி வெளியேறிவிடும்.

சில பெண்களுக்கு கருப்பையின் கழுத்துமூனை (Cervix) குறுகிய அல்லது அதன்வாய்ப் புறம் மூடியோ இருக்கும். அல்லது கருப்பையின் மேற் புறம் இடமாகவோ வலமாகவோ வளைந்து விட்டிருக்கும். இப்படி இருந்தால் கருத்தரிக்க மார்க்கமில்லை.

சில பெண்களுக்கு மர்மக் குறியின் துவாரம் (Vagiza) மூடிவடையும் இடத்தில் பொருந்தியிருக்க வேண்டிய கருப்பை (womb) சற்றே தள்ளியிருக்கும் இப்படியிருப்பதால் ஆணின் உயிரணு நிறத்தைச் செல்ல இயலாமல் நடுவிலே நின்றுவிடும். கருப்பையின் வாயிலில் தங்கியிருக்கும் சினை முட்டையை (Ovum) உயிரணு ஒன்று சந்திக்காதவரை கருவுயிருக்க இயலவே இயலாதல்லவா பெண் மலடாவதற்கு இதுவும் ஒரு காரணமேயாகும்.

சில பெண்களின் மர்மத் துவாரம்மிதமிஞ்சிய ஆழமுள்ளதாயிருக்கும். ஊனை சிதை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

போட்டிருக்கும் பெண்களுக்குப் பெரும்பாலும் இப்படி இருப்பதுண்டு இந்த அளவுக்குக் கணவரின் உறுப்பின் நீள அளவு தோதாகவில்லையென்றால் கர்ப்பம்தரிக்க வழியின்று ஆகிவிடுகிறது.

சில பெண்களுக்குப்பிறவிலேயே சினைமுட்டை உற்பத்தி குறைவாக இருக்கும் இப்படிப்பட்டவர்கள் பிறவி மலடிகளாவார்கள். சிலருக்கு நாத வால்க்குழாய் (Fallopian Tube) அடைபட்டிருக்கும். அல்லது ஏதாவது சில நோய்களால் அது மெலிந்து சிறுத்து விட்டிருக்கும் 'இவ்வாறுள்ள நாதவாகிக் குழாயில் சினை முட்டை பிரகபாணம் செய்து கருப்பையை வந்தடையும் முடியாமல் எங்காவது அடைபட்டுத்தங்கி அழிந்துகொண்டே இருக்கும்: இப்படியானாலும் பிள்ளைபேறு குறைக்கொம்புதான். இவ்வாறே சினைப்பையில் ஏதேனும் கோளாறு இருந்தால் அங்கிருந்து சினைமுட்டை வெளியேற முடியாமல் அல்லது முட்டையில் உயிர்ச்சத்து இன்றி மலடாக வழி வகுத்து விடும்.

சில பெண்களுக்குக் கன்னி ஜவ்வு (Hymen) கடினமுள்ளதாயிருக்கும் முதலிரவுக்குப் பிறகும் இந்த ஜவ்வு விலகாமலிருக்கலாம். இப்படியிருந்தால் தாம்பத்திய உறவின் போது ஆணின் உயிரணு தங்கு தடையின்றி உட்செல்ல முடியாமல் மர்மக்குறியின் வாயிலேயே தங்கிவிடும், இப்படிப்பட்ட பெண்களுக்கு மாத விலக்குக் கழிவுப் பொருள்களும் சரிவர வெளியேற முடியாமல்உள்ளுக்குள்ளே தங்கி அது விஷ நீராகி விடும். இதனாலும் கர்ப்பம் தரிக்காமலாகிவிடலாம். சிறு

பேய்ச்சொறி குணமாக!

இந்துப்பு அரை பலம் பொடி செய்து 6 அவுன்சு நெய்யில் போட்டு கலக்கி வெய்யிலில் காயவைத்து உச்சி முதல்பாதம் வரையில் தேய்த்து மேலுக்குப் பூசி மறுநாள் தலைக்குத் தண்ணீர் விடவும். சீயக்காய் தேய்த்து முழுகவும். எந்தவிதமான பேய்ச் சொறியும் குணமாகும்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அண்டவாதம் குணமாக!

கருஞ்சீரகம், வெள்ளைப் பூண்டு, தேன் இவைகளை வகைக்கு 2பலம் வீதம் எடுத்து லேசாய் வறுத்து தேன்விட்டு அரைத்து எடுத்து, ஒருவேளைக்கு ஒருகொட்டைப்பாக்கு அளவு வீதம் ஒரு நாளைக்கு மூன்றுவேளை சாப்பிட அண்டவாதம் குணமாகும்.

ஆபரேஷன் மூலம் கன்னி ஜவ்வை நீக்காதவரை அந்தப் பெண் மலடியாக இருக்க வேண்டியதுதானே!

மேலே குறிப்பிட்ட விஷயங்கள் எல்லாம் ஜனன உறுப்புக்களில் பிறவிலேயே உள்ள கோளாறுகளால் ஆகும் மலட்டுத்தனமாகும். இனி நோய்களாலும் பிறவற்றாலும் மலடாவதைப்பற்றிப் பார்ப்போம்.

பிட்டியுட்டரிச்சுரப்பு(Pitutary Glaror) புகிசைச் சுரப்பி Thyroid Gland) முதலிய சுரப்பிகளின் கோளாறுகளால்

அன்பாலயா ஸ்ரீகு

அறக்கட்டளை நடத்தும்
அருள் தந்தை
சுவாமி வேதாத்திரிமகரிஷியின்
ஆன்மீகக்

கருத்தரங்கு

19—2—94 (சனிக்கிழமை)
அன்று காலை 9-00 முதல்
பகல் 1 மணி வரை

தலைவர்:
முன்னாள் கல்வி அமைச்சர்
மாண்புமிகு உயர்திரு.
பொன்னையன், M.AB.L.,
அவர்கள்
ஆன்மீகப் பேராசிரியர்களும்
பல அறிஞர்களும் கலந்து
கொள்கின்றனர்.
கட்டணம்: ரூ. 40-00
(நாற்பது ரூபாய்)
(பகல் உணவு உட்பட)
சுவாமி வேதாத்திரி மகரிஷியின்
காயகல்பப் பயிற்சி
(வீரியத்தன்மை பெருகவும்
இறப்பைத் தள்ளிப்போடவும்)

நடத்துபவர்:
உயர்திரு. டாக்டர்
சி அம்பிகாபதி
M.B.B.S., D.L.O.
F.C.I.P.F.R.H.S. அவர்கள்

பெரியவர்கள் ரூ. 60-00
தம்பதியர்கள் ரூ. 75-00
மாணவ
மாணவியர்கள் ரூ. 30-00

இடம்: காதிபவன்
வெள்ளிவிழா மண்டபம்
லாயிட்ஸ்ரோட் சென்னை

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

மோகாவேச நோயால் பிடிக்கப் பட்ட பெண்கள் பெரும்பாலும் கர்ப்பம் தரிப்பதில்லை.

மூளைக்கோளாறுலோ Mind) Disorder) அல்லது மூளையில் வீக்கமோ Brin Tumoo) கொண் டிருக்கும் பெண்கள் அநேக மாக மலடிகளாகவே இருப்பார் கள். இரத்தசோகை (Anemiea) நோயால் பிடிக்கப்பட்டு மாத விலக்குநின்றுவிட்டிருந்தாலோ அல்லது நரம்புத்தளர்ச்சி Nervous Debility நோய் உண் டாகி இருந்தாலோ கருத் தரிப்பது துர்லபம்.

மலேரியா முதலிய நோய்களி னாலும் மலடுகளாக மார்க்க முண்டு எதிர்பாராத விபத்துக் களால் வயிற்றின் பிதோ அல் லது ஜனன மலடாகி விடலாம்

மலட்டுத் தன்மைக்கு மாத விலக்குக் கோளாறும் ஒரு முக் கிய காரணமாகும். சில பெண் களுக்குப் பழுத்த நாவல் பழத் தின் நிறத்தில் சூதகம் வெளிப் படும். இப்படிப்பட்ட சூதகப் போக்குள்ளவர்களே பெரும் பாலும் மலடுகளாகவே இருப் பார்கள்.

ஒழுக்கக் கேட்டினால் வழி தவறிய முறையில் இன்பம் துய்த்து அதனால் சிபிலிஸ் என் றும் கிரந்திப்புண் (Syphilis) வெட்டை, வெள்ளை, சூனேரியா, முதலிய துன்மார்க்க நோய்களுக்கு உள்ளான பெண்களுக்கு கருத்தரிப்பதும் முயற்கொம்பே. கணவனின் மூலம் இந்நோய்களைப்பெற்ற மனைவிமாரும் கர்ப்பம் தரிப் பது இயலாத காரியம்.

சிலருக்கு குங்குமப்பூநிறமான சூதகம் கொஞ்சங் கொஞ்சமாக வெளிவரும், இன்னும் சிலருக்கு வெண்மையாகவும் வழுவழுப் பாகவும் சூதகப்போக்குகாணப் படலாம் இவர்களும் பெரும் பாலும், மரபுகளே. கருத்தரிப் புக்குத் தங்கு தடையற்ற சுத்த மான மாத விலக்கு ஒரு முக்கிய காரணமாகும்.

புற்றுநோய் (Caneer) நாத வாகிக்க குழாயிலோ கர்ப்பப் பையிலோ கொண்டவர்களும், கழயம் குஷ்டம் முதலிய நோய் களினால் அவதிப்படுபவர் களும் உள் ஜுரம் (Hay Ferer] கருப்பையில் ஒரு வித கிருமி கள் உற்பத்தியாகிய அங்கு கருவாகும் பிண்டத்தை அரித் துத் தின்றுகொண்டே இருக் கும். இக்கிருமிகளுள்ள பெண் கள் மலடிகளாகவே இருப் பார்கள்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

426714

சிற்சபை பற்பொடி

பல்நோய், பற்புழு, ரத்தம், சிற்வடுதல், பல்இடுக்கம் நீங்கும்.

மலச்சிக்கல்நோய்

இளநரையை மாற்றி மயிர்நீண்டு வளர



பூந்தைலம்

மயிர்நீண்டுவளர மயிர்உதிர்வதைத் தடுக்க.

தயாரிப்பு: சிற்சபை பார்மஸி, சென்னை.24.

கிடைக்குமிடம்: சரஸ்வதி மெடிகல்ஸ்
152 ரங்காசாலை, கோடம்பாக்கம், சென்னை.24
122, சி. ராஜவீதி, காஞ்சிபுரம்.2.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சிற்றாமுட்டி

(PAVONIAZEYLANICA)

டாக்டர். பெ மு. இரா.

தென்னகத்தில் பயிராகும் சிற்றாமுட்டி அந்தமானிலும் இலங்கையிலும் ஏராளமாக வளருகின்றது. சிறுகுறுந் தொட்டி, சிறுந்தொட்டி எனவும் அழைக்கப்படும். சிற்றாமுட்டியின் சமூலமும் பயன்படும். துவர்ப்புச் சுவையுடனும் தட்பமான தன்மையுடனும் கூடிய இனிப்பு வகைப் பிரிவைச் சார்ந்த இதன் செயல் வறட்சியை அகற்றுவதாகும். தைல வகைகளில் சேரும் இதன் வேர்க்குடி நீர் னுல் எலும்புசுரமும் சுரதாகமும், அழல் நோயும் நீங்கி கண்கள் ஒளி பெறும் — சிற்றாமுட்டி, பேராமுட்டி முக்கா வேளை, கடுக்காய், நெல்லிக்காய், சுக்கு இணை சமன் உப்பு ஒருபடி நீரிலிட்டு எட்டிலொன்றாய்க் குறுக்கி உரித்து அருந்திவர கிராணி, வாயு குன்மம் முதலியன நீங்கும்.

சிற்றாமுட்டி, பேராமுட்டி, நெல்லிமுள்ளி வில்வ இலை கண்டங்கத்திரி, பாதிரிப்பட்டை, நிலக்குமிழ் முத்தக்காசு அகில் வேம்பு, தீப்பிலி, சுக்கு கோஷ்டம், நெருஞ்சில், ஆடாதோடை, சீந்தில் பற்படாம் இவை சமன் கட்டி இருநாழி நீரிட்டு எட்டிலொன்றாய்க் குறுக்கிப்பருகவாதசுரம் தீரும்.

சிற்றாமுட்டி, பச்சைப்பயறு, பர்ப்படகம், வில்வம் கொத்தமல்லி, இவை சமன் சட்டி தக்க அளவு நீரிலிட்டு கூடிநீராக்கி பழைய அரிசிக்கஞ்சியுடன் கலந்து வருக தோஷசுரம் தீரும்.

ஒரு தோலா சிற்றாமுட்டி வேரைச்சிதைத்து மூன்று அவுன்ஸ் நீரிலிட்டு ஒரு

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

கக்குவான் இருமலுக்கு

தேனும், மிளகாய் இலைச் சாறும், சமன் எடைகலந்து கலந்து, பத்துத்துளிகள் வீதம் காலை, மாலை, இருவேளையும் கொடுக்க கக்குவான் இருமல் குணமாகும்.

அவுன்சாகக் குறுக்கி அதில் வெருகடியளவு திப்பிலி அல்லது திரி கடுகு சூரணத்தைப் போட்டு, மூன்று நாள் ஆறு வேளை அருந்த வாதமும் சுரமும் நீங்கும்—சிற்றாமுட்டி வேர் ஆமுட்டி வேர் தூதுவளை வேர்க்கு, கருங்காஞ்சொறி வேர் பற்படாளம் சீந்தில்கொடி நொச்சி, ஈர்க்கு கடுக்காய்த்தோல் இவை வகைகடுக்காய் பலமாகச் சிதைத்து அரைப்படி நீரிலிட்டு அரை ஆழாக்காகக் குறுக்கி வடித்து மூன்றுவேளைக்குப் பங்கிட்டுக் கொடுக்க எவ் வகைச் சுரமும் தீரும். சுரத்தின் போது பேதியுமிருப்பான் கடுக் காயை நீக்கிச் சுக்கைச் சேர்க்க வும்.

முப்பது ரூபாயெடை சிற்றாமுட்டி வேர்ப்பொடியை இரண்டுபடி நீரிலிட்டு அரைப் படியாகக் குறுக்கி, அதில் சுக்கு, மிளகு, ஏலம் வெட்டி வேர் வகைக்கு ஒன்றை ரூபாயெடை அரைத்துப்போட்டு முக்கால்படி நல்லெண்ய்விட்டு காய்ச்சி வடித்துக்கொண்டு கொண்டு வாரமிருமுறை தலை முழுகி வர கண்நோய்களும் வலிநோய்களும் நீங்கும். இருபது பலம் சிற்றாமுட்டி வேர், வெட்டிவேர், மிளகு விலாமிச்சம்வேர் வகைக்கு இரண்டு பலம் இவற்றைச் சிதைத்து பதினாறுபடி நீரிலிட்டு இரண்டு படியாகச் சுருக்கிப் பிசைந்து வடித்து அதில் அதிமதுரம் மிளகு, கோட்டம்சீரகம், பூலாங்கிழங்கு வகைக்குக் கால்பலம் கூட்டிப் பசுவின் பாலிலரைத்துக்கலக்கி உடன் இரண்டுபடி நல்லெண்ணெயும், ஒருபடி பசுவின் பாலும் சேர்த்துக் காய்ச்சி வடித்து சிலநாள் தானிய புடத்தில் வைத்து எடுக்கவும். இதில் தலைமுழுகிவர பித்தம், நேத்திர வாயு, பீனிசம் தலைநோய் பழைய சுரம் முதலியன தீரும்.

தொடரும்

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

சிற்சபை மருத்துவமனை
CHITSABAI HOSPITAL

152, அரங்கராஜபுரம் சாலை, கோடம்பாக்கம்.

சென்னை-24. தொலைபேசி: 428098, 426714

நிறுவனர்: அமரர். டாக்டர். சிற்சபை

மஞ்சட்காமாலை, குன்ம நோய், பீனிசம், சுவாசகாசம், மூல வியாதிகள், வெண்புள்ளிகள், சோரியாப்படை, பெண்களின் மலட்டுத்தன்மை, ஆண்களின் வீரியக் குறைவு, ஆரம்பப் புற்றுநோய் முதலியவைகள் பூரணமாகக் குணப்படுத்தப்படும்.

வீரிய அணுப்பெருக்குதலுக்கு சிறந்த சிகிச்சை உண்டு.

AGASTHIAR JAUNDICE CURE CENTRE

அகஸ்தியர் மஞ்சட்காமாலை சிகிச்சை நிலையம்

மருத்துவர்கள்:

கௌரவ மருத்துவர்: டாக்டர். சி. அம்பிகாபதி
டாக்டர். சி. இரத்தினகுமார்

நோயாளிகளை பார்க்கும் நேரம்: காலை 8 மணி முதல் 1 மணி வரை.
மாலை 4 மணி முதல் 8-30 மணி வரை

பஸ் தடங்கள்: 11 D, 12 C.

இறங்குமிடம்: அரங்கராஜபுரம், நாகார்ஜுனா நகர்.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

அபொக்காவில் இன்றையத் தினம் தாய் கருவுற்றிருக்கும் போது, செப்டிரான் (Septran), பாக்டிரிம் (Bactrim), முதலிய மருந்துகளை கொடுப்பதில்லை. இதனை பிறக்கும் குழந்தைகட்கு மஞ்சட்காமாலை நோய் வருகின்றதாம். "குளோரோமைசிடின்" (Chloromycetin) மருந்துகளால், பிறக்கும் குழந்தைகட்கு Grey Baby Syndrome வருகின்றதாம்.

உலகத்தில் இன்றைய தினம் பதினைந்து மில்லியன் மக்கள் 'எய்ட்ஸ்" (Aids) நோயால் அவதியுறுகின்றனர். ஒவ்வொரு வருடமும் "ஐயாயிரம்" மக்கள் புதிதாக இந்நோய்க்கு ஆளாகின்றனர்.

இன்றைய மருத்துவம்

ஆண்களுக்குசுரக்கின்ற (Sex Hormone) இன உறுப்பு சுரப்பிலிருந்து Testosterone (டெஸ்டோஸ்ட்ரோன்) என்ற நீர் சுரக்கிறது. இது ரத்தத்தில் கலக்கும்போதுதான், விந்து கெட்டிப்பட்டு வாலிப வயதில் வெளியாகிறது. இந்த நீரானது பெண்கள் உடலிலும் சிறிதளவு இருப்பதாக லண்டனில் கண்டுபிடித்துள்ளனர்.

புண்கள், தீக்காயங்கள் போன்றவைகளை ஆற்றுவதற்கும் அதிக இரத்த அழுத்த நோய், மூளை, தோல் வியாதிகள் முதலியவற்றை குணப்படுத்துவதற்கும் ரஷியாவில் காந்த மருத்துவ சிகிச்சை (Magneto Therapy) உபயோகப்படுத்துகின்றனர்.

குழந்தைகட்கு பிறப்பிலேயே ஏற்படும் (Congenital-Glaucoma) என்ற பிறப்புகண் நீர் அழுத்த நோய்க்கு அமெரிக்காவில் இன்றைய தினம் "லாசர்" சிகிச்சை மூலமாக குணப்படுத்துகின்றனர், இத்தனை ஆண்டுகாலம் காத்திருந்தவர்கட்கு ஒரு அதிசய சிகிச்சையாகும்.

முந்திரிப்பருப்பு முதன் முதலாக "பிரேசில்" நாட்டிலிருந்துதான் இந்தியாவிற்கு போர்ச்சுச்சியரால் இங்கே இறக்குமதி செய்யப்பட்டது. இது நுரையீரல், குடல், கல்லீரல் முதலிய இடங்களில் ஏற்படும் வியாதிகளையும், மலச்சிக்கலையும் குணமாக்குகிறது. குறிப்பாக உடலில் வியாதிகளை எதிர்க்கும் திறனை அதிகரிக்கிறது.

நிறுவனர்: அமரர் டாக்டர். ப. சிற்சபை, கௌரவ ஆசிரியர்: டாக்டர். சி. அம்பிகாபதி, உதவி ஆசிரியர், வெளியிடுபவர்: டாக்டர் சி. தங்கதுரை, 122-C, இராஜ வீதி, காஞ்சிபுரம்-2. (போன்-2981) அச்சிடுவோர்: P.T. M. பிரஸ், 73-B, வள்ளல் பச்சையப்பன் தெரு, காஞ்சிபுரம்-631501.

CC-0. In Public Domain. Digitized by Muthulakshmi Research Academy